

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகின்ற 19ஆம் தேதி அன்று திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி ஆண்டார் குப்பம் பகுதியில் அரசு சார்பில் நலத்திட்ட உதவி வழங்கும் விழாவிற்கு வருகை தரும் இடத்தினை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நடைபெற்று வரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகரன் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் உள்பட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் அரசு துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பூண்டி வடக்கு ஒன்றிய திமுக சார்பில் மாபெரும் பொது உறுப்பினர் கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் ஜான் பொன்னுசாமி ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ்சிறப்புரையாற்றினார். அருகில் மு.பகலவன், ஜெ.மூர்த்தி, டி.கே.சந்திரசேகர், கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, பா.செ.குணசேகரன், ஆ.சக்திவேல், க.சு.தமிழ் உதயன், எம். முரளிதரண், இரா.இராகவன், வேல்முருகன், குருமூர்த்தி , ஸ்ரீதேவி, நாகபூருஷனும், சீனிவாசுலு, நாகராஜ், ஆர். ரகு, வேணுகோபால், ஆர் குமரேசன், ஜெயசித்ரா சிவராஜ், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் கழகத் தலைவர் வருகை குறித்து

# பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ பங்கேற்பு

திருவள்ளூர் ஏப் 10;

திருவள்ளூர் மத்திய மாவட்ட பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் திமுக சார்பில் செயல்வீரர் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் நசரத்பேட்டையில் நடைபெற்றது

பொதுக்குழு உறுப்பினர் எம்.முத்தமிழ்செல்வன் , வி.குமார், ஒன்றிய கழக நிர்வாகிகள் அண்ணாமலை, ஏ.ஜனார்த்தன் எம்.இளையான், எஸ்.புகழேந்தி, ஏ.ஆர். பாஸ்கர், சுமதிகுமார், பிரபாகரன், வி.பி.பிரகாஷ், க.பரிமலேழகன் முன்னிலை வகித்தார்கள் டி.திருமலைராஜ், கே.கேசவன், ந.ச.பாலா, ஷர்மிளா தேவி, பாலமுருகன், சைமன் ஆகியோர் வரவேற்றார்கள் இதில் மாவட்ட கழக செயலாளர்

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கினார்

அப்போது அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேசுகையில்

நம்மும் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நம்முடைய ஒப்பற்ற தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் ஏப்ரல் 19ம் தேதி அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அடுத்த ஆண்டார்குப்பம் பகுதிக்கு வருகை தர உள்ளார்

அதுமட்டுமல்லாமல் சில இடங்களில் கழகத் தலைவர் அவர்கள் Road show மக்கள் சந்திப்பு வரவேற்பு நிகழ்ச்சி உள்ளது சாலையில் இடது புறமா பொதுமக்களை திரட்டி அனைவரும் அணி திரண்டு நின்று உற்சாகம் வரவேற்பு அளித்திட திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் பிரம்மாண்ட ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

இதனை தொடர்ந்து திருவள்ளூர் அடுத்த திருப்பாச்சூரில் கழக தலைவர் அவர்கள் கலந்து கொண்ட கண்டன பொதுக்கூட்டத்திற்கு திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் உட்பட்ட பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த கழக நிர்வாகி அனைவருக்கும் இக் கூட்டம் வாயிலாக நன்றிகளையும் பாராட்டுகளை தெரிவித்து கொள்கிறேன் என அமைச்சர் பேசினார் இதில் மாவட்ட கழக நிர்வாகிகள் வி.ஜெ.சீனிவாசன், காயத்ரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், திருவேற்காடு செ.சங்கர், நிர்வாகிகள் இளைஞர் அணி கே. சுரேஷ்குமார், டி.குமரேசன், ஏஜி.ரவி, வி.தணிகாசலம், பூவை எம்.ராம்பாபு, கே.ஜி. ஆர்.ஸ்டாலின், சுமதி அத்திகிரி, பவானி, ஞானமூர்த்தி டி.துரைமுருகன், பாபு, சதீஷ், லிங்கேஷ், துவாரகேஷ், மற்றும் பூந்தமல்லி கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சி கழகங்களில் கிளைக் கழக செயலாளர்கள் கிளைக் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர் முடிவில் கிளைக் கழகச் செயலாளர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

### திருக்கோயில்களில் பணியாற்றி பணிக்காலத்தில் உயிரிழந்த

# 27 பணியாளர்களின் குடும்பத்தினருக்கு ரூ.75 இலட்சம் நிதியுதவி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை,ஏப்.10-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் இன்று (09.04.2025) ஆணையர் அலுவலகத்தில், திருக்கோயில்களில் நிரந்தர பணியாளர்களாய் பணியாற்றி பணிக்காலத்தில் உயிரிழந்த 27 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்பநல நிதியாக ரூ.75 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களின் நலன்களை காத்திடும் வகையில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் தொகுப்பூதியத்தில் பணியாற்றியவர்களை பணிவரன்முறை செய்தல், பதவி உயர்வு, ஆண்டுதோறும் 2 இணை புத்தாடைகள் மற்றும் சீருடைகள், குடியிருப்புகள், குடும்ப நல நிதி, ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம், ஒருகால பூஜைத் திட்ட அர்ச்சகர்களுக்கு மாதந்தோறும் ஊக்கத்தொகை மற்றும் அவர்களது பிள்ளைகள் உயர்கல்வி பயில கல்வி உதவித்தொகை, ஓய்வூதியதாரர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் கருணைக் கொடை, கட்டணமில்லா முழு உடற்பரிசோதனைத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் திருக்கோயில்களில் நிரந்தர பணியாளர்களாய் பணிபுரிந்து பணிகாலத்தில் உயிரிழந்த 27 பணியாளர்களின் குடும்பத்திற்கு குடும்ப நல நிதியாக ரூ.75 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது,

திருக்கோயில்களில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த பணியாளர்களின் குடும்பங்களுக்கு குடும்ப நல நிதி வழங்கப்படுகிறது. குடும்ப நல நிதியாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வந்த நிலையில் 2019 ஆம் ஆண்டு முதல் ரூ.3 இலட்சமாக உயர்த்தப்பட்டது. பல ஆண்டுகள் வழங்கப்படாமல் நிலுவையில் இருந்த குடும்ப நல நிதி திட்டத்தை விரைந்து வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இன்றைய தினம் 27 பணியாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.75 இலட்சம் வழங்கப்பட்டது. உறவுகளை இழந்து சொல்லொணா துயரத்தில் இருக்கும் குடும்பங்களுக்கு துறையின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, அக்குடும்பத்தினருக்கு எந்த வகையில் உதவி தேவைப்பட்டாலும் முடிந்த அளவிற்கு துறை எந்நாளும் துணை நிற்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி. பழனி, இ.ஆ.ப., திருமதி ந. திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, சி.லட்சுமணன், இணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஏ.விஜயன் ஏற்பாட்டில் ஆர்.டி. மதன்குமார், கே. அங்குசாமி முன்னிலையில்

# மாதவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா

## புழல் எம். நாராயணன் தலைமையில் தூத்துக்குடி எஸ். ஜோயல் திறந்து வைத்தார்!

சென்னை,ஏப்.10-

மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி சார்பில் நீர் மோர் பந்தல் திறக்கப்பட்டது.

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி சார்பில், 15வது வட்டம் மணலி புதுநகர் பால்பூத் பகுதியில் மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ. விஜயன் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர். டி. மதன்குமார், 15வது வட்டச் செயலாளர் கே. அங்குசாமி ஆகியோர் முன்னிலை வகித்தார்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமை தாங்கினார்.

நீர் மோர் பந்தலில் மோர், வெள்ளரிக்காய், தர்பூசணி ஆகியவை பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

கழக இளைஞரணி துணை செயலாளர் தூத்துக்குடி எஸ். ஜோயல் கலந்து கொண்டு 1000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு நீர் மோர், தர்பூசணி, மற்றும் பழ வகைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கேபிள் த. வே. கணேசன், டி.ஜி.ஆர். மணிவண்ணன், 19 ஆவது வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் ,மாதவரம் வடக்கு பகுதி நிர்வாகிகள் பகுதி துணை செயலாளர் கே. சிவசங்கரன், மாவட்ட பிரதிநிதிகள் நா. மோகன் குமார் நாகூரார், பா. சந்திரன், பி. தரணி, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார்,வட்டக் கழக நிர்வாகிகள் ராஜேந்திரன், பக்தவச்சலம், பி. டி. ரவிச்சந்திரன், தெய்வயானை மனோகரன், கண்ணன், எல்லமுத்து,மாவட்ட துணை அமைப்பாளர் வசீம் முகமது, பாலன், மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் ர. விஜய் ஆனந்த், வழக்கறிஞர் எம். என் .அஜய் தென்னவன், வி. சிவபிரகாஷ், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், ஜி. ராஜேஷ் கண்ணன், அ.சாந்தகுமார்

வழக்கறிஞர் சண்முகம், தனசேகரன், சோமு, சரவணன், சிவப்பிரகாசம், திராவிடச் செல்வன், திலீப், முருகன், சங்கர், அருண், முருகேசன், சுதாகர், குமார்,லோகநாதன், முருகன், குணசேகரன், பிரகாஷ், மாரி, வெங்கட், பாஸ்கர், பார்த்திபன், சதீஷ்,மணலி புது நகர் சி. எம். ராஜா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ. விஜயன் செய்திருந்தார்.



சென்னை மேற்கு மாவட்ட இணைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. தலைமையில் முதல் கட்டமாக தி.நகர் 141வது வார்டில் இரண்டு இடங்களில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தண்ணீர் மற்றும் நீர்மோர் பந்தலை திறந்துவைத்தார். நிகழ்ச்சியில் பகுதி செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை எம்.சி., தலைமை பொதுகுழு உறுப்பினர் ஜெ.ஜானகிராமன் வட்ட செயலாளர்கள் எஸ். லட்சுமிகாந்தன், என்.துரை, பி.மாரி, எஸ்.ராமலிங்கம், இரா.கருணாகரன் மற்றும் பகுதி, வட்ட கழகத்தினர் கலந்துகொண்டனர்.




சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் செ.யுவராஜ் ஏற்பாட்டில் ஆளுநர் திருப்பி அனுப்பிய அனைத்து மசோதாக்களையும் நிறைவேற்ற வேண்டும் என்று வழங்கிய உச்ச நீதிமன்ற தீர்ப்பை கொண்டாடும் வகையிலும் முதலமைச்சருக்கு தலைவர்கள் நன்றி தெரிவிக்கும் விதமாக தீர்த்தங்கிரீயம்பட்டு ஊராட்சியில் பட்டாசு வெடித்து மக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். புழல் ஒன்றிய பொறுப்பாளர் வழக்கறிஞர் ச. அற்புதராஜ் முன்னிலை வகித்தார்உடன் நா.ஜெகதீசன்,ஆர்.ஸ்டாலின், M.அண்ணாதுரை, இ.பாஸ்கரன், ஜெ.முருகன்,R. கருணாநிதி, இ.ஞானசேகரன், ஆர்.டி. தேவதாஸ், B.சுரேஷ் S.அந்தோணி,A.விஜயன், தே.ரா. அருண்குமார்,N. தேவானந்தன் P.ராஜேந்திரன்,டில்லி ரமேஷ், A.கஜபதி, R.நெடுமாறன் மற்றும் கழக நிர்வாகிகள் கழக உறுப்பினர்கள் மற்றும் கழகத் தொண்டர்கள் இறுதியில் உறுதிமொழி ஏற்றனர்.

### அணைக்கட்டு தொகுதி – வண்ணந்தாங்கல் ஊராட்சி – கோட்டைத் தெருவில்

# வீடுகளுக்கு மேலே செல்லும் மின்கம்பிகளை வேறு பாதையில் மாற்றி அமைத்திடுவீர்!

## சட்டப் பேரவையில் – ஏ.பி. நந்தகுமார் வலியுறுத்தல்!

**சென்னை,ஏப்.10-**

**சட்டப் பேரவையில் நேற்று பேசிய, அணைக்கட்டு தொகுதி கழக உறுப்பினர் ஏ.பி. நந்தகுமார், "அணைக்கட்டு தொகுதி - வண்ணாந்தாங்கல் ஊராட்சி - கோட்டைத் தெருவில் வீடுகளுக்கு மேலே செல்லும் மின்கம்பிகளை வேறு பாதையில் மாற்றி அமைக்க வேண்டும்!" என்று வேண்டுகோள் விடுத்தார்.**

**ஏ.பி. நந்தகுமார் :** அணைக்கட்டு தொகுதி, வண்ணாந்தாங்கல் ஊராட்சி, கோட்டைத் தெருவில் வீடுகளுக்கு மேலே செல்லும் மின்கம்பிகளை வேறு பாதையில் மாற்றியமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் வி. செந்தில்பாலாஜி :** அணைக்கட்டு தொகுதி, வண்ணாந்தாங்கல் ஊராட்சி, கோட்டைத் தெருவில் மேலே செல்லும் உயர்வழுத்த / தாழ்வழுத்த மின்பாதைகளின்கீழ் சுமார் 6 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேற்படி மின்பாதைகள் மாற்றியமைப்பதற்கு விண்ணப்பம் பெறப்பட்டு, 21-10-2024 அன்று பதிவு செய்யப்பட்டது. மதிப்பீட்டுத் தொகை 2 இலட்சத்து 90 ஆயிரத்து 240 ரூபாய், 20-12-2024 அன்று செலுத்தப்பட்டு, 90 சதவிகித பணிகள் முடிவடைந்த நிலையில், ஆட்சேபனை காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. ஆட்சேபணை நிவர்த்தி செய்ய தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. விரைவாக, அதற்கான பணிகள் முழுமையாக முடிக்கப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஏ.பி. நந்தகுமார்:** இந்திய துணைக்கண்டத்தில் உள்ள மாநிலங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக விவசாயிகளுக்கு முதன்முதலில் pumpset-க்கு இலவச மின்சாரத்தை வழங்கி, விவசாயிகளின் வாழ்வில் ஒளி ஏற்றியவர், நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). அவர் வழியே, 1 இலட்சத்து 90 ஆயிரம் விவசாயிகளுக்கு புதிதாக இலவச மின்சாரத்தை தந்த முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை விவசாயி என்கின்ற முறையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி, வண்ணாந்தாங்கல் ஊராட்சியில் கொட்டாவூர் கிராமத்தில் வீடுகளுக்கு மேல் செல்லும் HT line-யை மாற்றித் தர மின்சார வாரியத்தில் கோரிக்கை வைத்தபோது, 2 இலட்சத்து 94 ஆயிரத்து 200 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அங்கேயிருக்கக்கூடிய பொதுமக்கள் இல்லங்களின் மேல் செல்லக்கூடிய அந்த மின் wire-களை மாற்றுவதற்கு அவர்கள் ரூபாய் 2 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் பணத்தையும் கட்டி விட்டார்கள். இதுவரை அது மாற்றியமைக்கப்படவில்லை. மாற்றி அமைத்துத் தரப்படும் என்று மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வீடுகளுக்கு மேல் அவர்களுடைய அனுமதியில்லாமல் மின் wire-களை செலுத்தி விட்டு செல்கிறார்கள். அதை மாற்றுகின்றபோது, ஏழை மக்கள் இடத்தில் பணம் கட்ட வேண்டுமென்ற நிலை வருகின்றபோது, அவர்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். ஆகவே, அந்த line-யை போடுகின்றபோதே, அந்த வீடுகளுக்கு மேல் அந்த line போகாத மாதிரி மின்மாற்றிகளை அமைத்துத் தர வேண்டும்.

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** சில இடங்களில் line போட்ட பிறகுதான் வீடே கட்டுகிறார்கள். அதனால் அதையும் உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முழுமையாக தொகை செலுத்தப்பட்டு, 90 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. அங்கு ஆட்சேபணை இருக்கிற காரணத்தினால், பணிகள் தாமதமாகின்றன. ஆட்சேபணையை நிவர்த்தி செய்வதற்காக தொடர்ந்து அதிகாரிகள் பேசி வருகிறார்கள். விரைவாக அது சரி செய்யப்பட்டு, உடனடியாக மீதம் இருக்கக்கூடிய 10 சதவிகிதப் பணிகளும் முடிக்கப்பட்டு, அந்த மின் வழித்தடங்கள் மாற்றியமைக்கப்படும்.

என்னுடைய அணைக்கட்டு தொகுதியிலுள்ள பீஞ்சமந்தை, ஜார்தான்கொல்லை, பாலாம்பட்டு ஆகிய மலைக் கிராமங்களுக்கு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து சாலை வசதியே இல்லாத நிலையைப் போக்கி, அந்த மலைவாழ் மக்களுக்கு சாலை அமைத்து தந்தவர் தலைவர் தளபதி அரசு. அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மலைக்கு செல்லக்கூடிய அந்த மின் வயர்கள் மலைக் கிராமங்களில் மின்சாரம் தடைபடுகிறபோது எங்கேயாவது cut ஆகி விட்டது என்று சொன்னால், மின்சாரம் வருவதற்கு 2, 3 நாட்கள் ஆகின்றன. 20 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட அந்த மலைக் கிராமங்களுக்கு புதிதாக தார்ச்சாலை அமைத்து தந்தவர் முதலமைச்சர் அவர்கள். அந்த தார்ச்சாலை வழியாக கேபிள்களை அமைத்துத் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

வேலூர் மாவட்டம் ஒருங்கிணைந்த மாவட்டமாக இருந்தபோது ஏலகிரி ஏழைகளின் ஊட்டி என்று சொல்வார்கள். அந்த ஏலகிரியில் சற்றேறக்குறைய 200 resort-கள் இருக்கின்றன. மின் தடை ஏற்படுகிறபோது அங்கே உள்ள அந்த 200 resort-களிலும் மின்சாரம் தடைபடுகிற நிலை இருக்கிறது. அங்கே 2 ஏக்கர் நிலமும் தந்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் தேவராஜி அவர்களும் அதுகுறித்த கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த 2 ஏக்கர் நிலப்பரப்பிலே துணை மின் நிலையம் அமைத்துத் தர முன் வருவார்களா?



**அமைச்சர் வி. செந்தில் பாலாஜி:** உறுப்பினர் அவர்களுக்கு அங்கு resort இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஏற்கெனவே, உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து என்னிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, முதலமைச்சர் அவர்கள் 8 புதிய துணை மின் நிலையங்கள், 2 துணை மின் நிலையங்கள் தரமுயர்த்துதல் என மொத்தம் 10 துணை மின் நிலையங்களுக்கான அனுமதிகளை வழங்கியிருக்கிறார்கள். அதிலே அணைக்கட்டு தொகுதியில் 2 புதிய துணை மின் நிலையங்கள், 1 துணை மின் நிலையம் கூடுதலாக தரமுயர்த்துதல் என

3 பணிகளுக்காக முதலமைச்சர் அவர்களிடத்திலே அனுமதி பெறப்பட்டிருக்கிறது. கூடுதலாக, ஏலகிரி மலைப்பகுதியில் துணை மின் நிலையம் வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். எனவே, துறையினுடைய அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து, தேவை ஏற்படின் நிச்சயமாக, அதை அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மலைக் கிராமங்களிலுள்ள மின் வயர்களை கேபிள் வழித்தடமாக மாற்றித்

தர வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

மின் வாரியத்தினுடைய நிதி நிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றிய இளைஞரணி சார்பாக அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ரா.ஐயப்பன் ஏற்பாட்டில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி மதன்குமார் முன்னிலையில் கோடை வெப்பத்திலிருந்து மக்களை காக்கும் வகையில் நீர் மோர் பந்தலை கழக மாநில இளைஞரணி துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல்.திறந்து வைத்தார். உடன் புழல் ஒன்றிய பொறுப்பாளர் வழக்கறிஞர் ச. அற்புதராஜ், கிளை செயலாளர் மற்றும் ஒன்றிய அவை தலைவர் ரா.செல்வமணி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சீனிவாசன் ஒன்றிய மாவட்ட பிரதிநிதி நா. ஜெகதீசன் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் செ.யுவராஜ் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சிவகுமார், முரளி ,ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அ.டேவிட்(எ)நாவலன் உ.பிரேம்,மா,குறளரசன்,அ,மணிமாறன்,சே. அஸ்வின் ஆகியோர் முன்னிலை வகித்தனர் மற்றும் கழக நிர்வாகிகள் கழக உறுப்பினர்கள் கழகத் தொண்டர்கள் பங்கேற்றனர்.